# மக்கள் கண்காணிப்பகம் நிர்வாக இயக்குனர் ஹென்றி திபேன் அறிக்கை

# சட்டமன்ற கூட்டத்தொடர் நடக்கும்போதே சளைக்காமல் திமுக ஆட்சியில் போலீஸ் செய்த 16ஆவது என்கவுண்டர்

**அதிகரிக்கும் காவல் வன்முறைக்கு காரணமான போலீசாரை வன்மையாக கண்டிக்கிறோம்.**

**தமிழ்நாட்டில்** குற்றத்தைத் தடுக்கிறோம் என்ற பெயரில் பாத்ரூமில் வழுக்கி விழுந்த காலை உடைப்பதும், கைது செய்யப்பட்டவரை மீண்டும் சுட்டுப் பிடிப்பதும், தமிழ்நாட்டின் காவல்துறையின் வன்முறை என்பது அன்றாட பணியாக மாறிவிட்டது. தற்போது சட்டமன்றத் தொடர் நடக்கும் போதே **திமுக** ஆட்சியில் 16ஆவது என்கவுண்டர் நடத்தி, இதுவரை 19 நபர்களை சுட்டுக்கொலை செய்துள்ளது தமிழ்நாடு காவல்துறை, சென்னை மாநகரக் காவல் ஆணையராக அருண் பொறுப்பேற்ற பின்பு, சென்னை மாநகரக் காவல்துறையினர், 4 நபர்களை என்கவுண்டரில் சுட்டுக்கொலை செய்துள்ளது. இதுபோன்று தொடர்ந்து மனித உரிமை மீறலில் ஈடுபட்டு வரும் போலீசாரை மக்கள் கண்காணிப்பகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

**தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சென்னை காவல் துறையினர் சாதனை**

உத்திரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த, **ஜாபர் குலாம் உசேன், மேஷம்** மற்றும் **கர்நாடக மாநிலம் விகார் பகுதியைச் சேர்ந்த சல்மான் உசேன்** ஆகிய மூவரும் கடந்த 25ஆம் தேதி அன்று சென்னையில் உள்ள **ஈஞ்சம்பாக்கம், பெத்தேல்நகர், அடையாறு, இந்திராநகர், கிண்டி, எம்.ஆர்.சி** ஆகிய பகுதிகளில் பெண்களிடம் சங்கிலி பறிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனையறிந்து சென்னை போலீஸ் உடனடியாக சென்னை முழுவதும் 56 இடங்களில் வாகன சோதனை நடத்தி உள்ளனர். **கூடுதல் கமிஷனர் கண்ணன்** தலைமையில் 4 இணை கமிஷனர், துணை கமிஷனர் அடங்கிய 100க்கும் மேற்பட்ட போலீசார் உடனடியாக களத்தில் இறக்கப்பட்டுள்ளனர். 100க்கும் மேற்பட்ட கண்காணிப்பு சிசிடிவி கேமராக்களின் பதிவுகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கொள்ளையர்கள் **கர்நாடக மாநிலம் பிதார்** பகுதியின் பதிவு எண் கொண்ட மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும், மேலும் இவர்கள் **ஈரானி** கொள்ளையர்கள் என்பதையும் உறுதி செய்துள்ளனர்.



கொள்ளையர்கள் விமானம் மூலமாக தப்பிச் செல்வார்கள் என்பதை அறிந்து, கூடுதல் கமிஷனர் கண்ணன் தலையில் தனிப்படை சென்னை விமான நிலையத்திற்குச் சென்று இறுதியாக டிக்கெட் எடுத்தவர்கள் யார் என்பதைக் கண்டறிந்துள்ளது. விமானத்தில் தப்பிக்க முயன்ற கொள்ளையர்கள் இருவரும் தங்களது உடைகளை மாற்றி, மாற்றுடை அணிந்திருந்தனர்.

ஆனால் அவர்கள் அணிந்திருந்த காலணியை மாற்றவில்லை. மோட்டார் சைக்கிளில் சென்ற கொள்ளையர்களின்

காலணியை வீடியோ பதிவின் மூலம் ஏற்கனவே கண்டறிந்தால் **ஹைதராபாத்** செல்லும் விமானத்தில் அமர்ந்திருந்த கொள்ளையனை அடையாளம் கண்டுள்ளனர். மற்றொரு நபர் மும்பை செல்வதற்கு போர்டிங் பாஸ் ஏர் இந்தியா விமான பயணிகள் அமர்ந்திருக்கும் இடத்தில் உட்கார்ந்திருந்ததை காலணியை வைத்து அடையாளம் கண்டு கைது செய்துள்ளனர்.

கொள்ளையடித்த 27 பவுன் நகைகளையும் பங்கு போட்டுக் கொண்டுள்ளனர். விமானத்தில் வைத்து கைது செய்யப்பட்ட நபர் தனது பங்குக்குக் கிடைத்த தங்க நகையைக் கழுத்தில் அணிந்துள்ளார். மும்பை செல்லக் காத்திருந்த மற்றொரு நபர் தனக்கு கிடைத்த தங்க நகையை விமான நிலையத்தின் கழிவறையில் மறைத்து வைத்து செல்லும் போது எடுத்த செல்ல திட்டமிட்டுள்ளார். இதனைக் கண்டறிந்த போலீசார் நடத்திய விசாரணையில் மூன்றாவது நபரான **சல்மான் உசேன்** என்பவர் **விஜயவாடா** செல்லும் **பினாகினி** எக்ஸ்பிரஸில் தப்பிச் சென்றது தெரியவந்துள்ளது. உடனே ரயில்வே போலீஸ் உதவியுடன் மூன்றாவது நபரையும் கைது செய்து சென்னை அழைத்து வந்துள்ளனர். இப்படி சென்னை காவல்துறை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அறிவியல் முறையில் மிக விரைவாகக் குற்றவாளிகளைக் கைது செய்ததை, மக்கள் கண்காணிப்பகம் பாராட்டுகிறது. அறிவியல் முறையில் விசாணை நடத்தி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத்தரும் மேலாண்மை தமிழக காவல்துறைக்கும் உள்ளது என்கிற நம்பிக்கை ஏற்பட்டது.

**கொள்ளையர்கள் என்றால் சுட்டுக் கொல்வதா?**



**சினிமா திரைக்கதை எழுதும் காவல் ஆணையர் அருண்**

சென்னை காவல் ஆணையராகப் பொறுப்பேற்ற எட்டு மாதங்களில் **திருவேங்கடம், காக்கா தோப்பு பாலாஜி, சீசிங்ராஜா, தற்போது ஜபார் குலாம் உசேன்** என நான்கு என்கவுண்டரை நடத்தியுள்ளார். இதனால் சென்னையில் குற்றம் குறைந்துள்ளதா? இதைச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்டால், உங்கள் ஆட்சியைக் காட்டிலும் எங்கள் ஆட்சியில் கொலைகள் குற்றங்கள் குறைந்துள்ளது என சாமார்த்தியமாக பதில் சொல்லத்தான் பயன்படும் போலீசார் வன்முறையைக் கையில் எடுப்பதால் சமூகத்தில் குற்றங்கள் குறையாது. அப்படியென்றால் கொள்ளையர்களைச் சும்மா விட்டுவிட முடியுமா? நியாயமான கேள்விதான். தமிழக சட்டமன்றத்தில் பல அமைச்சர்கள் மீது பல கொள்ளை, சொத்துக் குவிப்பு வழக்குகள் உள்ளது. இவர்களை கைதுசெய்யும் போது காவல்துறை எப்படி நடந்து கொள்கிறது?

இவர்களுக்கு முன்பு காவல் ஆணையர் **அருண்** விரல் நீட்ட முடியுமா? அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு ஒரு சட்ட அணுகுமுறை. அதிகாரமற்றவர்களுக்கு தனிச்சட்ட அணுகு முறையா? இதுதான் சட்டத்தின் ஆட்சியா? மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசின் அணுகுமுறை இதுதானா! சிறையிலிருந்து விசாரணைக்கு அழைத்து வரப்பட்டு என்கவுண்டர் செய்யப்பட்ட **திருவேங்கடம்** சம்பவத்தில், திரைக்கதை வசனம் எழுதிய காவல் ஆணையர் **அருண்,** விமானத்தில் ஏறிய நபரைக் கைது செய்த பின்பும் என்கவுண்டர் நடத்தி, அதே திரைக்கதையை மீண்டும் எழுதியுள்ளார். கற்பனை வளமிக்க காவல் ஆணையர் **அருண்** சினிமா துறையில் இருக்க வேண்டியவர்.

**சென்னை காவல்துறையில் செயல்பாட்டில் எழும் சந்தேகங்கள்**

அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தங்களது அனுபவம் மற்றும் அறிவுக்கூர்மையால் மூன்று மணி நேரத்தில் குற்றம் செய்தவர்களைக் கைது செய்த சென்னை



போலீஸ், கைதுக்கு உள்ளானவர்களை முழுமையாகச் சோதனை செய்யவில்லையா? குற்றவாளிகள் தப்பிப்பார்கள் எனத் தெரிந்தும் புதியசட்டம் பிஎன்எஸ்எஸ் பிரிவு 43(3)ன் படி கைது செய்யப்பட்டவர்களுக்கு ஏன் கை விலங்கு போடவில்லை.

**கர்நாடக மாநிலத்தில்** இருந்து கொண்டுவரப்பட்ட இருசக்கர வானத்தைப் பாதுகாப்பற்ற சென்னை **தரமணி** ரயில்நிலையம் அருகில் ஏன் கொள்ளையர்கள் நிறுத்தினார்கள்? இருசக்கர வாகனத்தில் ஏன் துப்பாக்கி வைத்தார்கள்? ரயிலில் பயணம் செய்யக்கூடிய கொள்ளையன் கையில் துப்பாக்கியை எடுத்துச் சென்றிருக்கலாமே! ஏற்கனவே கடந்த ஆண்டு **திருவேங்கடத்தை** துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற அனுபவமிக்க திருவான்மியூர் காவல் ஆய்வாளர் **முகமது புகாரி,** கொள்ளையர்களின் இருசக்கர வாகனத்தில் சோதனை செய்த போது, இருசக்கர வாகனத்தில் இருந்த துப்பாக்கியைக் கொள்ளையர்கள் எடுக்கும் வரை, காவல் ஆய்வாளர் முகமது புகாரி பொறுப்பற்ற நிலையில் ஏன் இருந்தார். என்கவுண்டர் நடக்கும் போதெல்லாம் அருகாமையில் அரசு மருத்துவமனையில் இருந்தும் முதலில் தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கான காரணம் என்ன? இப்படி அடுக்கடுக்கான சந்தேகங்கள் நடந்து முடிந்த என்கவுண்டரில் உள்ளது.

**திராவிட மாடல் ஆட்சியில் அதிகரிக்கும் காவல் சித்திரவதைகள் போலி மோதல் சாவுகள்**

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் திமுக ஆட்சி பொறுப்பு ஏற்றதில் இருந்து காவல்நிலையச் சித்திரவதைகள், மரணங்கள், போலி மோதல் சாவுகள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது.16 என்கவுண்டர் மூலம் 19 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் தேதி சென்னை ஜி5 காவல் நிலையத்தில் காவல் சித்திரவதையால் விக்னேஷ் என்பவர் கொலை செய்யப்பட்டார். அப்போது சட்டமன்றத்தில் **மாண்புமிகு முதல்வர்** இனிமேல் தமிழ்நாட்டில் இதுபோன்ற காவல் வன்முறைகள் நடைபெறாது என்று அறிவித்தார்.

**அறிவிப்பின் நிலை என்ன?** மாண்புமிகு முதல்வருக்கு நடைபெற்று வரும் காவல் வன்முறைகள் குறித்த தகவல்கள் தெரிகிறதா? அல்லது அவரது கவனத்திற்கு கொண்டு செல்லப்படாமல் மறைக்கப்படுகிறதா? சட்ட ஒழுங்கை பாதுகாக்கிறோம் என்ற பெயரில் கட்டுப்பாடற்ற நிலையில் காவல்துறை செயல்பட்டு வருகிறது.

இதனை **மாண்புமிகு முதல்வர்** அவர்கள் தடுக்க வேண்டும் **ஜாபர் குலாம் உசேன்** என்கவுண்டர் வழக்கில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் இங்கு நேரடியாக வருவதற்கு அச்சப்படுவார்கள் அல்லது காவல்துறையின் கட்டுப்பாட்டில் வைக்கப்படுவார்கள். இந்த நிலையில் காவல் மரணத்திற்குப் பின்பு செய்யக்கூடிய அனைத்து சட்ட நடவடிக்கைகளும் முறைப்படி செய்யப்பட வேண்டும். குற்றத்தில் ஈடுபட்டவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பணியிடை நீக்கம் செய்ய வேண்டும். மேலும் மாநில மனித உரிமை ஆணையம் தானாக முன்வந்து வழக்கைப் பதிவு செய்து நேரடியாக விசாரணை செய்ய வேண்டும்.

மேலும் இதுபோன்ற காவல் வன்முறைகள் தமிழ்நாட்டில் நடைபெறாத வண்ணம் மாண்புமிகு **தமிழக முதல்வர்** அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோருகின்றோம்.